DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.26/2018**

Prosecution witness **PW.8 (LW.8)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Sakthivel (DSP) | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(Accused present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **23.02.2026**

**23.02.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது அரியலூர் மாவட்டம், அரியலூர் உட்கோட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு மேல்குன்னூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது 08.01.2017ம் தேதி மாலை 16.30 மணிக்கு உதகை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து மேற்குறிப்பு செய்யப்பட்டு பெறப்பட்ட N437/SDO/C/2016 dated 16.12.2016 என்ற தபாலை பெற்று அதனுடன் இணைக்கப்பட்டிருந்த புகார் மனுவை பரிசீலித்து சட்ட ஆலோசனை பெற்று புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் தொடர்பான ஆவணங்களை பெறும் பொருட்டு குன்னூர் TANTEA நிறுவனத்திற்கும், கோவை ஒப்பனக்கார வீதியிலுள்ள யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கிக்கும் ஆவணங்களை கேட்டு தபால் அனுப்பி அதன் பேரில் ஆவணங்களை பெற்று முதற்கட்ட விசாரணை மேற்கொண்டு புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.16/2017 இதச பிரிவுகள் 465, 468, 420, 471 உ/இ 511 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்**)

3. வழக்கின் கோப்பினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே நிலையத்தில் ஆஜரான எதிரி மனோகரனை மாலை 05.40 மணிக்கு கைது செய்து, சாட்சிகள் பாலகிருஷ்ணன், மணி ஆகியோர் முன்னிலையில் விசாரித்த போது எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த வங்கியில் தாக்கல் செய்யும் பொருட்டு 2ம் எதிரி விஸ்வநாதன் மோசடியாக தயார் செய்து கொடுத்த ஆவணங்களின் நகல்களை மேற்படி சாட்சிகள் முன்பாக கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி வழக்கு கோப்புடன் சேர்த்தேன். (**1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆகும்**) (**வழக்கு கோப்புடன் கைப்பற்றுதல் மகஜர் தாக்கல் செய்யப்படாததால் கைப்பற்றுதல் மகஜர் குறியீடு செய்யப்படவில்லை**)

4. பின்னிட்டு சாட்சிகள் கண்ணன், பாலகிருஷ்ணன், மணி, பன்னீர்செல்வம், ஆனந்தன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு எதிரியை வழக்கு சொத்துக்களுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னிட்டு நான் வேறு காவல் நிலையத்திற்கு பணி மாறுதல் அடைந்து சென்றதால் வழக்கு கோப்பினை பின்வரும் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. முதல் தகவல் அறிக்கையானது 08.01.2017ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்றம் நிகழ்ந்ததாக சொல்லப்படும் தேதி 10.12.2016 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஏற்பட்ட காலதாமதம் குறித்து முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் புகார் மனு பெற்று வழக்கிற்கான ஆவணங்களை சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி

ஆவணங்களை பெற்று பரிசீலனை செய்து வழக்கு பதிவு செய்ய காலதாமதம் ஏற்பட்டது.

2. 08.12.2016ம் தேதியே உதகை காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் மனு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகார் மனுவை நான் 17.12.2016ம் தேதி தான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். புகார் மனுவுடன் எந்தவொரு ஆவணமும் இணைத்து கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் புகார் மனு பெற்ற 17.12.2016ம் தேதி முதல் வழக்கு பதிவு செய்த 08.01.2017ம் தேதிக்குள்ளான புகார்தாரரை நான் விசாரித்தேனா என்றால் இல்லை.

3. TANTEA நிர்வாகத்திற்கும் யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கி மேலாளருக்கும் ஆவணங்களை கேட்டு நான் கொடுத்ததாக சொல்லப்படும் கடிதத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் காவல் நிலைய வழக்கு கோப்பில் தற்போதும் அது உள்ளது. சம்பந்தப்பட்ட யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியிலிருந்து எந்தவொரு புகாரும் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

4. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாகவே எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்தவொரு ஆவணத்தின் நகலையும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல, கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து தான் கைப்பற்றினேன். உண்மையில் நான் சொல்வது போல் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து ஆவணங்களை கைப்பற்றியிருந்தால் அந்த கைப்பற்றுதல் மகஜர் குற்ற இறுதி அறிக்கையுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

5. நான் பதிவு செய்துள்ளது போல் சாட்சிகள் யாரும் என்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், சாட்சிகள்

முன்பாக எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சட்டப்படியான நடைமுறைகளை பின்பற்றாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஆவணங்களை முறையாக படிவம் 91 தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் படிவம் 91 நான் தயார் செய்யவில்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2026.02.23 16:54:55 -0700

JUDICIAL MAGISTRATE,
COONOOR.